சுருக்கம்

விளம்பரம் – செய்தி மக்கள் தொடர்புத்துறை – 2021–2022ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பு – அரசு விளம்பரங்கள் வெளியிடும் பணிகள் அனைத்தும் இணையம் வழியாக மேற்கொள்ள மென்பொருள் உருவாக்கவும், பராமரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற அறிவிப்பு – தேசிய தகவலியல் மையம் மூலம் செயல்படுத்த நிருவாக அனுமதி மற்றும் நடப்பு நிதியாண்டிற்கான செலவினமாக ரூ.6,70,000/–ஐ (ரூபாய் ஆறு இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (விளம்பரம்)த் துறை

அரசாணை (நிலை) எண்.150

நாள்.17.11.2021

திருவள்ளுவராண்டு 2052

பிலவ வருடம்–கார்த்திகை மாதம்–1 ஆம் நாள்

படிக்கப்பட்டது:

1. முதுநிலை தொழில் நுட்ப இயக்குநர், தேசிய தகவலியல் மையம், தலைமைச் செயலகம், சென்னை–9 அவர்களின் கருத்துரு நாள்.17.08.2021.
2. 2021–2022ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பு, நாள் 06.09.2021.

******

ஆணை:

06.09.2021 அன்று நடைபெற்ற சட்டமன்றப் பேரவைக் கூட்டத் தொடரில், 2021–2022ஆம் ஆண்டிற்கான செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மானியக் கோரிக்கையின் போது, மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள், "அரசு விளம்பரங்கள் வெளியிடும் பணிகள் அனைத்தும் இணையம் வழியாக மேற்கொள்ள மென்பொருள் உருவாக்கவும், பராமரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்" என அறிவித்தார்கள்.

2. மேலே முதலாவதாக படிக்கப்பட்ட முதுநிலை தொழில்நுட்ப இயக்குநர், தேசிய தகவலியல் மையம், தலைமைச் செயலகம், சென்னை அவர்களது கடிதத்தின் மூலம் மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்த அறிவிப்பினை செயல்படுத்துவது தொடர்பான கருத்துருவினை வழங்கியுள்ளார்.

3. அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட "அரசு விளம்பரங்கள் வெளியிடும் பணிகள் அனைத்தும் இணையம் வழியாக மேற்கொள்ள மென்பொருள் உருவாக்கவும்,

...2

பராமரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்" என்ற அறிவிப்பினை தேசிய தகவலியல் மையம் மூலம் செயல்படுத்தவும், இத்திட்டத்திற்கு தேசிய தகவலியல் மையம் அளித்துள்ள திட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் இத்திட்டத்தினை செயல்படுத்த ஆண்டுதோறும் தொடர் செலவினமாக ரூ.4,40,000/-மும் (ரூபாய் நான்கு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) மற்றும் பராமரிப்பு செலவினத்திற்காக நடப்பு நிதியாண்டிற்கு ரூ.2,30,000/-மும் (ரூபாய் இரண்டு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) (46,000X5=2,30,000)/- என ஆக மொத்தம் ரூ.6,70,000/-க்கு (ரூபாய் ஆறு இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கியும் மற்றும் 2022-2023-ஆம் நிதியாண்டிற்கு இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக ரூ.4,40,000/- (ரூபாய் நான்கு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) வழங்க அனுமதி அளித்தும், மேலும் இரண்டு ஆண்டுகள் தொடரவுள்ள பராமரிப்பு செலவினத்திற்காக 2022-2023ஆம் நிதியாண்டில் ரூ.5,52,000/-(ரூபாய் ஐந்து இலட்சத்து ஐம்பத்து இரண்டாயிரம் மட்டும்) வழங்க அனுமதி அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்படும் தொகை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்புகளின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

(i) அரசு விளம்பரங்கள் வெளியிடும் பணிகள் இணையம் வழி மேற்கொள்வதற்கான தொடரும் செலவினம் ரூ.4,40,000/- (ரூபாய் நான்கு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்):-

"2220 செய்தி மற்றும் விளம்பரம் - 60 ஏனையவை - 106 கள விளம்பரம் - மாநிலச் செலவினங்கள் - AI வெளியிடுதல் - 308 விளம்பரமும் பிரச்சாரமும் - 01. விளம்பரக் கட்டணங்கள்." IFHRMS (த.தொ.கு. 2220 60 106 AI 30801)

(ii) அரசு விளம்பரங்கள் வெளியிடும் பணிகள் இணையம் வழி மேற்கொள்வதற்கான பராமரிப்பு செலவினத்திற்கான தொகை ரூ.2,30,000/-(ரூபாய் இரண்டு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்):-

"2220 செய்தி மற்றும் விளம்பரம் - 60 ஏனையவை - 106 கள விளம்பரம் - மாநிலச் செலவினங்கள் - AI வெளியிடுதல் - 308 விளம்பரமும் பிரச்சாரமும் - 09 ஏனையவை." IFHRMS (த.தொ.கு. 2220 60 106 AI 30809)

5. மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.6,70,000/-ம் (ரூபாய் ஆறு இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) 2021-2022-ஆம் நிதி ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று

வழங்கிட செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்தை 2021-2022-ஆம் நிதியாண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவினை தவறாது உரிய நேரத்தில் நிதி(த.வ.(ம)செ)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை வெளியிடுவதற்கு நிதித்துறை அலுவல் சார்பற்ற எண்.49362 /நிதி(வ.செ.)/2021, நாள் 15.11.2021-ன்படியும் மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.819 (எண்ணூற்று பத்தொன்பது) உடன் இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மகேசன் காசிராஜன்,
அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர், சென்னை-9.
முதுநிலை தொழில்நுட்ப இயக்குநர்,
தேசிய தகவலியல் மையம், தலைமைச் செயலகம், சென்னை-9.
சம்பள கணக்கு அலுவலர், சம்பள கணக்கு அலுவலகம், சென்னை-9.
நகல்:
மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர்
அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
நிதித் துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
நிதி (த.வ(ம)செ/வரவு செலவு-பொது/IIவ.வ.I)த் துறை, சென்னை-9.
செய்தி மக்கள் தொடர்பு (கணக்கு/வரவு-செலவு)த் துறை, சென்னை-9.
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (அநமு-2)த் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு /உதிரி நகல்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

17/11/21